[2005 ஏப்ரல் 13

5. அரசினர் தனித் தீர்மானம்

திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கீழ்க்கண்டவாறு பேரவையில் முன்மொழிகின்றேன்:

திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம்:

"தெய்வப் புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இறவாத இலக்கியமாகிய திருக்குறள், இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை விழைகின்றது.

எழிலார்ந்த இலக்கிய வடிவம், ஆழ்ந்த கருத்துகள், அறத்தை, நீதியை விளக்கும் அற்புதம், உலகளாவிய பார்வை ஆகியவற்றால் உலக இலக்கியத்தில் தன்னேரில்லாத தனி இடத்தைப் பெற்றது திருக்குறள்.

மானுடப் பண்புகளை விளக்கி, மனித குலத்திற்கு மாபெரும் அறநூலாய் விளங்கும் மகத்தான நூல் திருக்குறள். காலத்தை வென்று நிற்கும் ஞானக் களஞ்சியமாய் ஞாலத்தில் உயர்ந்து நிற்பது திருக்குறள். புனித நூலாம் பைபிளுக்கு அடுத்தபடியாக, உலக அளவில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தனிப்பெரும் சிறப்பு திருக்குறளுக்கே உரியது.

மக்களாட்சித் தத்துவம், அரசியல், ஆட்சி அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இணையற்ற கோட்பாடுகளாகிய சமயம் சாராத தன்மை, சமூக நீதி ஆகியவற்றைப் பற்றியும், அரிய பல கருத்துகளைத் தன்னகத்தே கொண்ட திருநூல் திருக்குறள். தொன்மை வாய்ந்த நமது மரபையும், புதுமை வாய்ந்த குடியாட்சிக் கோட்பாடுகளையும் கொண்டது திருக்குறள்.

2005 ஏப்ரல் 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11–30

மானுடத்தின் விழுமிய பண்புகளை, அது அறம் சார்ந்ததாயினும் சரி, உலகியல் சார்ந்ததாயினும் சரி, அவற்றை உலகளாவிய அளவில் எடுத்து இயம்பும் சமயம் சாராத ஓர் உன்னத நூல் திருக்குறளைத் தவிர, வேறு ஒன்று இன்னும் எழுதப்படவில்லை என்பதே உண்மையாகும். சாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு, சகல மனிதருக்கும் பொது நீதியை உரைக்கும் திருமறை திருக்குறளாகும். இந்தியக் குடியாட்சியின் சமயம் சாராத இயல்புக்கு ஏற்ற ஒரே நூல் திருக்குறள்தான்.

சங்க காலமாகிய கி.மு. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட தொன்மை வாய்ந்ததாயினும், இன்றைய நவீன குடியாட்சித் தத்துவங்களுக்கு ஏற்ற முறையில் அரசியல் தத்துவத்தை விளக்கும் திருக்குறள், இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியம் என்னும் சிறப்பைப் பெறுவதற்கு முற்றும் தகுதி வாய்ந்தது. அன்பு, அருள், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, பயனில சொல்லாமை, ஈகை, புகழ், வாய்மை, கொல்லாமை, இறைமாட்சி, கல்வி, பெரியாரைத் துணைகோடல், செங்கோன்மை, கண்ணோட்டம், ஊக்கம் உடைமை, ஆள்வினை உடைமை, சொல் வன்மை, அவை அஞ்சாமை, பொருள் செயல் வகை, மருந்து, குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, உழவு, ஒழுக்கம், நட்பு போன்றவை பற்றிய காலத்தால் அழியாத கருத்துகளை ஞாலத்திற்குத் தந்திருக்கும் நன்னூல் திருக்குறள். இவ்வாறு, உலகைத் தழுவும் அகலப் பார்வையைக் கொண்டிருந்தபோதிலும், ஆழமான கருத்துகளை மிகச் சிறிய வடிவான குறள் வெண்பா வடிவில் திருவள்ளுவப் பெருமான் வடித்திருக்கும் திறம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது.

ஒவ்வொரு திருக்குறள் மட்டும் அன்றி, அந்தக் குறளின் ஒவ்வொரு சீரும் செதுக்கி வடிவமைக்கப்பட்ட சிறப்பை உடையது. எக்காலத்திற்கும் பொதுவான கருத்துகளை இயம்பும் நூல் என்பதால், தற்காலத்திலும் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய உன்னத நூல் என்று திருக்குறள் ஒன்றை மட்டுமே நாம் சொல்ல இயலும்.

இத்தகைய இணையற்ற சிறப்புகளைப் பெற்றிருக்கும் ஈடற்ற திருமறையாகிய திருக்குறளை, இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்பது, இந்தப் பேரவையில் உள்ள ஒவ்வொருவருடைய விருப்பமும் ஆகும்.

எனவே, உலகச் சிந்தனையின் மணிமுடியாகவும், தமிழ் மொழியின் தலையாய அணிகலனாகவும் விளங்கும் வான்புகழ் கொண்ட திருக்குறளை, இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று இப்பேரவை பெரிதும் விழைகிறது.

திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று, பல ஆண்டுகளாக தமிழ்ச் சான்றோர்களும், அறிஞர் பெருமக்களும் வலியுறுத்தி வந்த வேண்டுகோளுக்கிணங்க, 16–9–2004 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளித்திட்ட கோரிக்கை மனுவை ஒட்டி, உலகப் பொதுமறையாகவும், தேசியத் திருமறையாகவும் விளங்கும் திருக்குறளை, தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று இப்பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(குறுக்கீடு) பேராசிரியர் அவர்கள்.

பேராசிரியர் க. அன்பழகன்: எதிர்க் கட்சிகள் சார்பாக ஒரு கருத்தைச் சொல்லக்கூட வாய்ப்பு இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். தங்களுடைய, தாங்கள் கொடுத்த அந்தத் திருத்தம் சேர்க்கப்பட்டுவிட்டது. அதனாலே வேறு ஏதும் இல்லையென்று நினைத்தேன் நான்.

2005 ஏப்ரல் 13]

பேராசிரியர் க. அன்பழகன்: அதை அந்த மாதிரி நீங்கள் announce பண்ணிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கொடுத்த திருத்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. பேராசிரியர் அவர்கள் கொடுத்த திருத்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகத் தனி நபர் தீர்மானத்தைத் தொடர்ந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதை வேறு நேரங்களில் பேசுங்கள்.

6. விதி 110—ன்கீழ் அறிக்கை

விவசாயிகள், நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் பயன்பெறும் வட்டி குறைப்புத் திட்டம்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வளத்திற்கும், கிராம மக்களின் வாழ்க்கை நலத்திற்கும் அடிப்படையாக வேளாண் தொழில் அமைந்துள்ளது. வாழுகின்ற மனிதருக்கெல்லாம் உணவு அளித்து உயிர் அளிக்கும் வேளாண் தொழிலை வெல்லும் தொழில் வேறு எதுவும் இல்லை என்பதே இந்த உலகம் கண்ட நடைமுறை. அதனால்தான் வள்ளுவப் பெருமானும்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, உழவு செய்கின்றவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள், அவர்கள் ஏனையோரைத் தாங்குகின்றனர் என்று வேளாண் தொழில் செய்வோரை உயர்த்திக் கூறுகிறார் வள்ளுவர்.